மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். அன்றைய தினம் நேரம் போதவில்லையோ என்னவோ தெரியவில்லை, தங்களுடைய மானியத்தில்; இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாக, அரசியல் கட்சிகள் ஆக்கிரமிப்பை அகற்றுவதிலே ஒத்துழைக்க வேண்டும் என்று சொன்னேன். உடனே, பூனைக்குட்டி வெளியே வந்ததைப்போல், சிவபுண்ணியம் அவர்கள் நீர் இல்லாத பகுதியிலே கட்டியிருப்பதைதானே நாங்கள் சொல்கிறோம் என்றார். இப்பொழுது போய் பார்த்தீர்களென்றால், கோடையிலே எல்லா ஏரிகளும் நீர் இல்லாமல்தான் இருக்கும். அங்கேதான் கட்டிக்கொண்டிருப்பார்கள். நீர் வந்தவுடனே என்ன சொல்வார்களென்றால், வெள்ளத்திலே மூழ்கிவிட்டோம், எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்வார்கள். ஆகவே, காய்ந்த காலத்திலே வீடு கட்டவேண்டியது; மழை பெய்த காலத்திலே காப்பாற்ற வேண்டியது. ஆகையினாலேதான் இந்த நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

சொகுசுப் பேருந்து

***47675—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லிலிருந்து வேலூர் செல்ல சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் தடம் எண் 981, திருச்செந்தூரிலிருந்து திருப்பதி, திண்டுக்கல், வேலூர் வழியாக தினசரி

2009 ஜூலை 2]

2 அதி நவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி தடப் பேருந்தில் திண்டுக்கல்லுக்கு 10 இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முன்பதிவு செய்யப்பட்டு வருகின்றது. இந்த வசதியானது திண்டுக்கல்-வேலூர் பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூரிலிருந்து கிளம்பி வரக்கூடிய பேருந்துகளில், 10 seat-கள் மட்டுமே ஒதுக்கப்படுகின்றன. ஒருமுறை வேலூர் பொதுக் கூட்டத்திற்குச் செல்வதற்காக முயற்சி செய்தபோது, எம்.எல்.ஏ.-வுக்கே ஒரு சீட் வாங்குவது மிகவும் சிரமமான ஒரு சூழ்நிலையில்தான் இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கிறோம். மேலும், வேலூர் என்று நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், சி.எம்.சி. மருத்துவமனை புகழ்பெற்ற ஒரு மருத்துவமனை. பல மாநிலங்களிலிருந்தும், தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்தும் சாதாரண மக்கள் மருத்துவச் சிகிச்சைக்காகச் செல்கிறார்கள். ஆகவே, திண்டுக்கல்லிலிருந்து ஒரு சொகுசுப் பேருந்து இல்லாவிட்டாலும், ஒரு சாதாரண பேருந்தையாவது வேலூர், பெங்களூரு, ஈரோடு, சேலம் போன்ற பகுதிகளுக்கு விடுவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால், மதுரை பெரிய நகரமாக இருப்பதன் காரணமாக, மதுரையிலிருந்தும் அருகில் இருக்கக்கூடிய நகரங்களிலிருந்தும்தான் திண்டுக்கல் வழியாகப் பேருந்துகள் வருகின்றன. ஆகவே, திண்டுக்கல், மாவட்டத் தலைநகரமாக இருந்தும், சென்னை போன்ற இடங்களுக்குக்கூட அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் தனிப் பேருந்து இல்லை; மற்ற பஸ்களில்தான் நாங்கள் செல்ல வேண்டி இருக்கிறது. அதுகுறித்து கவனித்து, அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்

[2009 ஜூலை 2

இப்போது ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலிருந்தும் சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. அதேநேரத்தில், மதுரையில் இருக்கின்ற போக்குவரத்துக் கழகம், திருச்சியில் இருக்கின்ற போக்குவரத்துக் கழகம் என்று தனித் தனியாக அந்தப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாகவே பல பேருந்துகள் ஆங்காங்கு சென்று கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இன்னும் ஓரிரு நாட்களில் மதுரை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஒரு தனிப் பேருந்து திண்டுக்கல்லிலிருந்து வேலூருக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், நம்முடைய தமிழகப் போக்குவரத்துக் கழகங்களில் நடத்துநர்களாக ஒரு பெண்கூட இல்லை. இன்றைக்கு இந்திய நாட்டில் ஜனாதிபதியாக, சபாநாயகராகப் பெண்கள் வந்துவிட்டார்கள். விமானத்தை ஓட்டக்கூடிய இடத்தில்கூட பெண்கள் வந்துவிட்டார்கள். ஆனால், போக்குவரத்துக் கழகத்தில் ஒரு நடத்துநர்கூட பெண்ணாக இல்லை. ஆகவே, மாநகராட்சிகளில் ஓடக்கூடிய பேருந்துகளிலாவது ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தில் பெண்களை நடத்துநர்களாக பணி நியமனம் செய்ய இந்தத் துறை பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுவது தலைவர் கலைஞருடைய ஆட்சி. இதிலே பெண்மைக்கு பல இடங்களில் முன்னுரிமை தந்திருக்கிறார்கள். இதிலே முதன்முதலிலே ஆட்களை எடுக்கிறபோது, சென்னை மாநகரிலே 4, 5 பெண்களை ஓட்டுநர்களாக, நடத்துநர்களாக நாங்கள் தேர்வு செய்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டது. சரியாக 30 நாட்கள், மீண்டும் எங்களிடம் வந்து எங்களால் அந்த வண்டியிலே வேலை செய்ய முடியவில்லை, எங்களுக்கு மாற்றுப் பணி தாருங்கள்; ஒன்று, Bus Stand duty கொடுங்கள்; இல்லையென்றால் Clerk உத்தியோகம் கொடுங்கள் என்று சொல்லி, 30 நாட்களுக்குள், Appointment Order வாங்கிய 30 நாட்களுக்குள்ளே மாற்றுப் பணி கேட்கிறார்கள். அவர்கள் எந்தப் பணிக்குத்

2009 ஜுலை 2]

தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தப் பணியை அவர்கள் செய்வார்களேயானால், அவர்களுக்கு வேலை தருவதிலே எங்களுக்கு ஒன்றும் மாற்றுக் கருத்தே இல்லை. ஆனால், அங்கு பணியைப் பெற்றவுடனே, பணியாணை வாங்கியவுடனே ஓரிரு வாரங்களில், தொழிற்சங்கத் தலைவரையோ அல்லது சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது யார் மூலமாவது வந்து, "உங்களுக்கே பாவமாக இல்லையா? பெண் செய்ய முடியுமா?" என்று எங்களைக் கேட்கிறார்கள். அதுதான் எங்களுக்குச் சங்கடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்போதெல்லாம் போக்குவரத்துத் துறை பொற்காலமான துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. நாகர்கோவிலுக்கு அருகிலே ஈத்தாமொழியிலிருந்து சென்னைக்கு ஒரு பேருந்து விட வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருந்தேன். ஈத்தாமொழியைச் சுற்றி மீனவக் கிராமங்கள் நிரம்ப இருக்கின்றன. கிராமப்புறங்கள் அதிகம் இருக்கக்கூடிய அந்த ஈத்தாமொழி பகுதியிலிருந்து நாகர்கோவில் வழியாகச் சென்னைக்கு ஒரு பேருந்தை உடனடியாக இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், அந்தந்தப் பகுதியிலிருந்து சென்னைக்குப் பேருந்து விட வேண்டும் என்று எண்ணுவது இயற்கை. அதிலே ஒன்றும் மாறுபாடான கருத்து இல்லை. ஆனால், மார்த்தாண்டத்திலிருந்து ஒரு அரசு விரைவுப் பேருந்து சென்னையை நோக்கி வருகிறது. இடையிலே 40 இடங்களிலே பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், எந்த இடத்திலும்—எந்தப் பேருந்து நிலையத்திலும்—நிற்காமல், நேரடியாக மார்த்தாண்டத்திலிருந்து சென்னையை நோக்கி வரும்போது, அதற்கு ஆகக்கூடிய செலவு என்பது நாள் ஒன்றுக்கு 12,000 ரூபாய். ஆனால், வரவு என்பது 300 ரூபாய், 400 ரூபாய் என்ற அளவிலே வந்த காரணத்தால்தான் விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைக் கொஞ்சம்

மட்டுப்படுத்தி, ஆங்காங்கு இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களின் மூலமாகவே பேருந்துகளை இயக்கலாம்; அதனால், நேரடிக் கண்காணிப்புக் கிடைக்கும் என்ற காரணத்தால் அப்படிப் பேருந்துகளை மாற்றி இயக்கிக் கொண்டிருக்கிறோம். இப்போதுகூட புதிய பேருந்துகள், 3,000 வந்த பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டதையெல்லாம் இலகுவாகச் செய்ய முடியும்.

இல்லையென்று சொல்வதற்கு நம்மால் முடியாது. உடனடியாகச் செய்து தர முடியும். திரு. அ. ராஜன் அவர்கள் கேட்பதைப்போல, மதுரை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக அங்கிருந்து சென்னையை நோக்கி ஒரு பேருந்து நிச்சயமாக விடப்படும். ஆனால், அதற்கு 30 நாட்கள் அவகாசம் தேவைப்படுகின்றது. காரணம், புதிய வண்டி வரவேண்டும். அது வந்தவுடன் திரு. அ. ராஜன் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி ஜெயங்கொண்டத்திலிருந்து தினமும் இரவு 10-30 மணிக்கு Ultra Deluxe Bus ஒன்று இயக்கப்படுகின்றது. ஆனால், அந்த பஸ் பயணிகளுக்குப் போதவில்லை. தினமும் கிட்டத்தட்ட 15, 20 டிக்கெட்டுகளுக்கு Branch Manager-ரிடம் சொல்லச் சொல்லி, என்னையே Bus Broker-ஆக ஆக்கிவிட்டார்கள். ஆகவே, ஜெயங்கொண்டத்திலிருந்து மேலும் ஒரு Ultra Deluxe சொகுசு பஸ்ஸை மீன்சுருட்டி வழியாக இயக்குவார்களா என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை உங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, அணைக்கரையிலிருந்து கும்பகோணத்திற்கு கடந்த 5 மாதங்களாக பஸ் இயக்கப்படவில்லை. காரணம், அங்கே பாலம் பழுதடைந்துள்ளது. அந்த பஸ்ஸை மீண்டும் இயக்குவதற்கு நீங்கள் வழிவகை செய்யவேண்டும். ஏனென்றால், ஏறக்குறைய ஒரு கி.மீ. தூரம் பயணிகள் அக்கரைக்கு நடந்து சென்று பஸ் ஏற வேண்டியிருக்கிறது. அதனால் வயதானவர்கள் ஒரு கி.மீ. தூரம் நடப்பதற்கு நிரம்ப சிரமப்படுவதைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கிறது. எனவே, பாலத்தின்மீது பஸ்ஸை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று உங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

2009 ஜூலை 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கரை பாலத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், அங்கே புதிய பாலம் கட்டுவதாக அறிவித்தார்கள். நேற்று முன்தினம்கூட, தனியார் பேருந்து உரிமையாளர்களெல்லாம் என்னைச் சந்தித்தபோது, "எங்களுடைய பேருந்துகள் பாலத்திற்கு இந்தப் பக்கம் இருப்பது இங்கேயே நிற்கிறது; அதேபோல அந்தப் பக்கம் இருப்பது அங்கேயே நிற்கிறது. எனவே, இருபக்கமும் காவலர்களை நிறுத்தி, ஒவ்வொரு பேருந்தாக விடுவதற்காவது அனுமதி தரவேண்டும்" என்று கேட்டார்கள். அதை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். அவரும் பொதுப் பணித் துறை அமைச்சரோடு கலந்து பேசி இதற்கு ஒரு முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் முடிவு எடுத்த பிறகு, காவலர்களை நிறுத்தி, ஒரு பக்கமாக பஸ் போவது, மறுபக்கமாக வருவது என்பதைப்போல, அவர்கள் அனுமதி தருவார்களானால் அதேமாதிரி இயக்கலாம். அப்படி இல்லையென்றால், புதிய பாலம் கட்டிய பிறகுதான் இயக்க முடியும். இன்னொன்று. ஜெயங்கொண்டத்திற்குப் பேருந்து விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களின் தேவைக்கேற்ப நிச்சயமாகப் பேருந்து விடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள், மூன்று Ultra Deluxe Bus-ஐத் தருவேன் என்று ஏற்கெனவே சொன்னார்கள். நாங்குனேரி தொகுதியிலிருந்து சென்னைக்கு எந்த பஸ்ஸும் வருவதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருணையால் அந்த பஸ் வருமா? அதுமட்டுமல்ல; அங்கே நெடுஞ்சாலையில் பாணான்குளம் மற்றும் தளபதிசமுத்திரம் போன்ற இடங்களில் எந்த பஸ்ஸும் நிற்பதில்லை. அதனால் மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றார்கள். எனவே, அங்கு ஒரு stopping-ஐப் போட்டு, stage அமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

[2009 ஜூலை 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் எப்போது தொகுதிக்குச் செல்வார் என்று கூறினால் அன்றைய தேதியிலிருந்தே, அவர் கேட்கின்ற அந்த பஸ்ஸை விடலாம். நாளை, மறுநாள் சனிக்கிழமை நீங்கள் போவதாக இருந்தால்கூட, நான் நிச்சயமாகப் பேருந்தை விடச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

துணைக் கால்நடை மருத்துவமனை

***61357—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், லந்தக்கோட்டையில் துணைக் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கோட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், லந்தக்கோட்டை கிராமத்தில் தற்போது கால்நடை கிளை நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை. அவருக்கு மாற்றாக, திரு. ஆர்.எம். பழனிசாமி.